பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 623 **நாள்: 28.10.2026**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஐஜடி மெட்ராஸ் இணைந்து செயல்படுத்தும் "அனைவருக்கும் ஐ.ஐ.டி. மெட்ராஸ் திட்டத்தின்" கீழ் சென்னைப் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஐஜடி மெட்ராஸ் இணைந்து செயல்படுத்தும் "அனைவருக்கும் ஐ.ஐ.டி. மெட்ராஸ் திட்டத்தின்" கீழ் சென்னைப் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.10.2026) செனாய் நகரில் உள்ள அம்மா அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஐஜடி மெட்ராஸ் ஊக்கமளிக்கும் பேச்சாளர் திரு.என்.ஹரிகிருஷ்ணன், கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அனைவருக்கும் தரமான கல்வி மற்றும் சமமான உயர்கல்வி வாய்ப்புகள் கிடைக்க செய்வது, அரசு பள்ளி மாணவர்கள் நாட்டின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் வாய்ப்புகளை பெறுவதற்காக அனைவருக்கும் ஐஜடி மெட்ராஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூன்று வட்டார அலுவலகங்கள் வாயிலாக உள்ள 35 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 3,179 சென்னை பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். இந்த பயிற்சி வகுப்பு 28.10.2026 மற்றும் 29.10.2026 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடத்தப்படுகிறது.

இன்று (28.10.2026) செனாய் நகரில் உள்ள அம்மா அரங்கில் மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் 16 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 2,219 சென்னை பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இதனைத் தொடர்ந்து நாளை (29.10.2026) தியாகராயநகர், சர்.பிட்டி தியாகராய அரங்கில் நடைபெறவுள்ள பயற்சி வகுப்பில் 19 சென்னை பள்ளிகளைச் சார்ந்த மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு JEE நுழைவு தேர்வு இல்லாமல் ஐஜடி மெட்ராஸ் பட்டப்படிப்பு வாய்ப்புகளை

அறிமுகப்படுத்துதல், தகுதித் தேர்வுக்கான பயிற்சி வழங்குதல் மற்றும் உயர்கல்வி அணுகலை மேம்படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இந்த பயிற்சியில் ஆர்வமுள்ள மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அடுத்தகட்டத் தேர்வு மற்றும் பயிற்சிக்காகப் பட்டியலிடப்படுவார்கள். வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு அவர்களின் ஆர்வம் மற்றும் தயார்நிலையை அறியும் வகையில் அறிமுகத் தேர்வு நடத்தப்படும். அதில் சிறப்பாகச் செயல்படும் மாணவர்கள் அடுத்தகட்டத் தகுதித் தேர்வுக்கான தயாரிப்பு பயிற்சிக்கு பரிந்துரைக்கப்படுவார்கள். மாணவர் தேர்வு மற்றும் பயிற்சிக்கான நடைமுறைகள் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து இறுதிப்படுத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு ஐஐடி மெட்ராஸின் நடைமுறைகளுக்கு ஏற்ப நான்கு வார கால ஆன்லைன் பயிற்சி வழங்கப்படும். மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்று, அதனைத் தொடர்ந்து நடத்தப்படும் நேரடி தகுதித் தேர்வில் பங்கேற்க வழிவகை செய்யப்படும். தகுதித் தேர்வில் வெற்றி பெற்று, சம்பந்தப்பட்ட படிப்பின் சேர்க்கை விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் ஐஐடி மெட்ராஸ் பட்டப்படிப்பில் சேருவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள்.

மாணவர்களுக்கு ஐஐடி மெட்ராஸின் Data Science and Applications, Electronic Systems, Aeronautics and Space Technology, Management and Data Science ஆகிய BS பட்டப்படிப்பு வாய்ப்புகள் குறித்து வழிகாட்டுதல் வழங்கப்படும். ஒவ்வொரு படிப்பிற்குமான அதிகாரப்பூர்வப் பெயர்கள், தகுதிகள் மற்றும் சேர்க்கை நடைமுறைகள் ஐஐடி மெட்ராஸின் நடைமுறையில் உள்ள அறிவிப்புகளின்படி பின்பற்றப்படும்.

தகுதித் தேர்வுக்கான கட்டணத்தை ஏற்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதி ஆதரவு முன்மொழியப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு, தகுதி நிபந்தனைகள் மற்றும் செயல்முறைகள் மாநகராட்சியின் நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல்களுக்கு உட்பட்டு இறுதிப்படுத்தப்படும். மாணவர் பட்டியல் தயாரித்தல், பயிற்சியில் பங்கேற்பைக் கண்காணித்தல் மற்றும் சேர்க்கை நடைமுறைகளில் வழிகாட்டுதல் வழங்குதல் ஆகியவை மாநகராட்சி மற்றும் ஐஐடி மெட்ராஸ் இணைந்து ஒருங்கிணைக்கும்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.